| | | |
|---|---|---|
| தரம் **05** | பாடசாலை மட்ட இறுதி மதிப்பீடு - 2022(2023)<br>**தமிழ்** | புள்ளிகள் |
| சுட்டெண்: ☐☐☐☐☐☐ | | நேரம்: 1.30 மணித்தியாலம் |

**01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

01. தமிழில் உள்ள வல்லின எழுத்துக்கள் எவை?
    (1) ய் ர் ல் வ் ழ் ள்  (2) ங் ஞ் ண் ந் ம் ன்  (3) க் ச் ட் த் ப் ற்

02. பிளாஸ்டிக்கை தமிழில் எவ்வாறு அழைப்பர்?
    (1) வெகிளி  (2) நெகிழி  (3) குமிழி

03. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை.
    (1) அணிந்துரை  (2) முன்னுரை  (3) பதிப்புரை

04. பின்வரும் சொற்களுள் பெயராகவும் வினையாகவும் வரும் சொல் எது?
    (1) பானம்  (2) மழை  (3) இரை

05. புகையிலை என்ற சொல்லின் கூட்டத்தைக் குறிக்கும் சொல் எது?
    (1) கட்டு  (2) சிப்பம்  (3) படை

06. “ப” எனும் எழுத்து இயல்பொலியாக வரும் சொல் எது?
    (1) பட்டம்  (2) கம்பம்  (3) கோபம்

07. ஒன்று + ஊர் என்பதைச் சேர்த்து எழுதினால் வருவது?
    (1) ஒன்றுஊர்  (2) ஓரூர்  (3) ஒரு ஊர்

08. நல்வழியில் கூறப்பட்டுள்ள மனிதர்கள் தேடக்கூடிய செல்வம் எது?
    (1) பொன்  (2) பணம்  (3) மரியாதை

09. அதியமான் என்ற அரசன் யாருக்கு நெல்லிக்கனியைக் கொடுத்தான்?
    (1) ஔவையாருக்கு  (2) திருவள்ளுவருக்கு  (3) பாரதியாருக்கு

10. “ஒழுக்கம் சிறந்தது பாப்பா – உன் உயிரின் உயர்ந்தது” எனும் பாடலைப் பாடியவர் யார்?
    (1) அழ. வள்ளியப்பா  (2) க. வீரகத்தி  (3) சின்னத்தம்பிப் புலவர்

(20 புள்ளிகள்)

**02. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக**

01. மரண வீட்டுச் சடங்கின்போது .......................... (ஊரி, ஊறி) இசைக்கப்படும்.
02. பாம்புகள் வசிக்கும் இடம் .................. (அலை, அளை) என அழைக்கப்படும்.
03. சுதந்திர தின விழாவின்போது ............ (வான, வாண) வேடிக்கை காட்டப்பட்டன.

(6 புள்ளிகள்)

**03. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்க**

01. அறிவியலாளர் / அரிவியழாளர் / அறிவியளாலர்

02. ஆராட்சி / ஆராச்சி / ஆராய்ச்சி

03. பல்களைக்கலகம் / பல்கலைக்கழகம் / பல்கழைக்களகம்

(6 புள்ளிகள்)

**04. பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக**

01. விகடமாகவும் பரிகாசமாகவும் பேசுபவன் = ………………………………………

02. ஒன்றைப் பிரதியெடுத்தல் = ………………………………………

03. புதிதாகச் செய்த கப்பல், தேர் என்பவற்றை முதன்முதலாகச் செலுத்திப் பார்த்தல் = ………………………………………

(6 புள்ளிகள்)

**05. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியை இடுக.**

01. ஆகா எவ்வளவு அழகான பூங்கா

02. சிறுவர்கள் தொடர்ந்து தொலைக்காட்சி பார்த்தால் என்ன நடக்கும் என மாலா கேட்டாள்.

(6 புள்ளிகள்)

**06. பின்வரும் சுருக்கக் குறியீட்டினை விரித்து எழுதுக.**

01. பா.அ.ச. = ………………………………………

02. ம.ப.பா. = ………………………………………

03. இ.ஒ.கூ. = ………………………………………

(6 புள்ளிகள்)

**07. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இராமன் குகனைப் பார்த்து ‘‘குகனே! இன்று முதல் தசரதருக்கு ஐந்து புதல்வர்கள். நீ எனக்குத் தம்பி பரதன் முதலியோர் உனக்குத் தம்பியர். சீதை உனக்கு அண்ணி. பதினான்கு ஆண்டுகள் பதினான்கு நாட்கள் போலக் கழியும். பின்னர் நாம் ஒன்று சேர்ந்து வாழ்வோம். என் சொல்லைத் தட்டாதே! ஓடம் கொணர்க’’ என்றார்.

1. முன்னிலை ஒருமை பெயர்ச்சொல் ஒன்று தருக?

………………………………………………………………………………………

2. ‘‘இன்று முதல் தசரதருக்கு ஐந்து புதல்வர்கள்’’ என யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

………………………………………………………………………………………

3. பந்தியில் வந்துள்ள நிறுத்தற் குறிகள் இரண்டு எழுதுக?

………………………………………………………………………………………

4. விசிறியும் கீழ்காலும் இடம்பெறும் சொல் ஒன்று தருக?

………………………………………………………………………………………

5. தங்கை என்பதன் எதிர்ப்பால் சொல் ஒன்று தருக?

………………………………………………………………………………………

(10 புள்ளிகள்)

**08. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

01. மரம் + வேர் = ………………………..

02. தெற்கு + திசை = ………………………..

(4 புள்ளிகள்)

**09. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

01. நானூறு = ………………………..

02. வெந்நீர் = ………………………..

(4 புள்ளிகள்)

**10. பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக**

01. வாயூறுதல் = ………………………..

02. தட்டிக் கழித்தல் = ………………………..

03. நாக்குப் புரளுதல் = ………………………..

(6 புள்ளிகள்)

**11. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. நாற்படைகள் எவை?

………………………………………………………………………………………

2. “டும் டும் மழை மழை டும் டும்” என்ற பாடலை இயற்றியவர் யார்?

……………………………………………………………………………………

3. தொலைபேசியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

……………………………………………………………………………………

4. விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் மனிதன் யார்?

……………………………………………………………………………………

5. “அவையள் வருகினம்” என்பதை எழுத்துவழக்கில் எழுதுக?

……………………………………………………………………………………

6. நாம் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டு தருக.

……………………………………………………………………………………

7. சூரியன் எத்தனை மணி நேரம் விடுமுறை எடுத்தது?

……………………………………………………………………………………

8. பவளக்கொடி எதை விற்று வாழ்ந்து வந்தாள்?

……………………………………………………………………………………

9. பொலித்தீன் பாவனையால் ஏற்படும் தீமை ஒன்று தருக.

……………………………………………………………………………………

10. தொல்பொருள் ஒன்று தருக?

……………………………………………………………………………………

(20 புள்ளிகள்)

**12. “கிராமிய விளையாட்டுக்களால் ஏற்படும் நன்மைகள்” எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

01. ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

02. ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

03. ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

(6 புள்ளிகள்)